[திரு. அ. இரகுமான்கான்] [1990 ஏப்ரல் 26

அவரை நான் கேட்கிறேன். இந்த தேசத்தினுடைய விடுதலைக் காக பகத்சிங் பாராளுமன்றத்திலே வெடிகுண்டு வைத்து தூக்குக் கயிற்றை முத்தமிட்டானே, அவனைத் துரோகி என்று சொல்கிறாரா ?

திரு. குமரி அனந்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பகத்சிங்கினுடைய வீரம், அவனுக்கு ஜனநாயகம் கிட்டாத போது அவனுக்கு பேலட் பேப்பர் கிட்டாதபோது; அதைப்போல வாஞ்சிநாதன் பேரிலேயும்,.... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடுகள்) மிக முக்கியமான பிரச்சினை. (குறுக்கீடுகள்).

8. விதி 110-ன் கீழ் பொதுப் பணித் துறை அமைச்சரின் அறிக்கை.

காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ள கருத்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதி 110-ன் கீழ் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் ஓர் அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இன்று காலை உச்சநீதிமன்றத்தில் காவிரி பிரச்சினை தொடர்பான வழக்கில் மத்திய அரசின் சார்பில் பின்வரும் கருத்து நீதிபதிகளிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியும் என்று இதுவரையில் எண்ணியிருந்தோம். ஆனால் இப்போது உருவாகியுள்ள நிலையில் இதை உச்ச நீதிமன்றத்தின் முடிவுக்கே விட்டுவிடுகிறோம். இவ்வாறு மத்திய அரசின் சார்பில் கூறப்பட்டுள்ளது. உருவாகியுள்ள சூழ்நிலையை மத்திய அரசு ஒப்புக்கொண்டு உண்மை நிலையை எடுத்துரைக்கக் கோரி 24—4—1990 அன்று இந்த மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு மதிப்பளித்தமை குறித்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

7. மானியக் கோரிக்கைகள், 1990–91-விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு குமரி அனந்தன் அவர்களுக்குச் சொல்கிறேன். தமிழ்நாட்டில் நடைபெற்ற கொடைக்கானல் வெடிகுண்டுச் சம்பவம், மற்றைய துப்பாக்கிப் பிரயோகங்கள் ஆகியவற்றுக்கும் பிரபாகரன் தலைமையில் இயங்குகிற விடுதலைப்